
MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only

# 94 GLORIOUS YEARS OF REUNION



Printed Matter

To

BOOK POST

If Undeliveried please return to ...

Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

# Bulletin

## Diocese of Marthandam

## மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

"Your birth, O Virgin Mother of God, Announced Joy to the whole world, for from you has risen the Sun of justice, Christ our God.




செப்டம்பர்

08

# தூய மரியாவின் பிறப்புத் திருநாள்

மலர் 21 செப்டம்பர் 2024 இதழ் 9

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 04.09.2024 | Wednesday | 6.00 pm | Holy Mass | Konam |
| 06.09.2024 | Friday | 10.00 am | Marriage | Mariagiri |
| 07.09.2024 | Saturday | 6.30 pm | Altar Blessing | George Nager |
| 08.09.2024 | Sunday | 6.30 am | Holy Mass | Manjakala |
| 08.09.2024 | Sunday | 6.00 pm | Holy Mass | Suralacode |
| 09.09.2024 | Monday | 2.30 pm | UCC Meeting | Nagercoil |
| 13.09.2024 | Friday | 11.00 am | Homily | Peruvilai |
| 14.09.2024 | Saturday | 9.00 am | Seminar - Bible Apostolate | Kuzhithurai |
| 16.09.2024 | Monday | 10.00 am | Marriage | Anakarai |
| 16.09.2024 | Monday | 3.00 pm | Church Blessing | Nalanchira |
| 18.09.2024 | Wednesday | 8.00 am | Jubilee Inauguration SIC Sisters | Thiruvalla |
| 19.09.2024 | Thursday | 10.00 am | Marriage | George Nager |
| 19.09.2024 | Thursday | 4.00 pm | Baptism | Fathimanager |
| 20.09.2024 | Friday | | Re-union Celebration | Parassala |
| 21.09.2024 | Saturday | | Re-union Celebration | Parassala |
| 22.09.2024 | Sunday | 7.00 am | Holy Mass New Church Door Blessing | Cathedral Marthandam |
| 25.09.2024 | Wednesday | 7.00 am | Memorial Mass | Pathanamthitta |
| 27.09.2024 | Friday | 6.00 pm | Holy Mass | Ganadasapuram |
| 28.09.2024 | Saturday | 5.30 pm | Vespers | Latin Church Trivandrum, Puthukurichy |
| 29.09.2024 | Sunday | 9.00 am<br>2.00 pm | Holy Mass<br>Year of the Word of God - Inauguration | Sooriacode<br>Pastoral Centre, Kuzhithurai |




# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 21 செப்டம்பர் 2024 இதழ். 9

**Patron**
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

**Editor**
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

**Cover Design**
*Mrs. Uni Kumari B.*

**Printing**
*Santhom Press,*
*Marthandam*

**Published By**
*The Chancellor*
*Diocese of Marthandam*




மலர். 21 ஆகஸ்ட் 2024 இதழ். 8


Address :
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail : mardiobulletin@gmail.com




# The Malankara Syrian Catholic Church Bulletin of the Diocese of Marthandam


## முக்கியமான நாட்கள்

செப்டம்பர் 2024




மலர் 21 செப்டம்பர் 2024 இதழ் 9


- 01 உலக கடிதம் எழுதும் தினம்
- 02 உலக தேங்காய் தினம்
- 05 ஆசிரியர் தினம்
  சர்வதேச தொண்டு நாள்
- 08 சர்வதேச எழுத்தறிவு தினம்
- 10 உலக தற்கொலை தடுப்பு தினம்
- 11 தேசிய அமைதி நாள்
- 13 சர்வதேச சாக்லேட் தினம்
- 15 சர்வதேச ஜனநாயக தினம்
- 16 உலக ஓசோன் தினம்
- 18 உலக மூங்கில் தினம்
- 21 அமைதி, அகிம்சைக்கான நாள்
- 22 உலக ரோஜா தினம்
- 23 சைகை மொழிகளின் சர்வதேச தினம்
- 26 காது கேளாதோர் தினம்,
  உலக கருத்தடை தினம்.
- 27 உலக சுற்றுலா தினம்
- 29 உலக இதய தினம்
- 30 சர்வதேச மொழிபெயர்ப்பு தினம்

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | Circulars | 3-6 |
| 2. | குருமடச் செய்திகள் | 7 |
| 3. | குருக்கள் கூடுகை | 8 |
| 4. | மேரி மக்கள் துறவற சபை | 9 |
| 5. | Bishop’s Feast Day Charity Fund 2023-2024 | 9 |
| 6. | MIDS | 10 |
| 7. | பங்குப்பேரவை ஒப்புதல் பெற்ற பங்குகள் | 11 |
| 8. | மலங்கரை கத்தோலிக்க சிறார் இயக்கம் (MCCL) | 12 |
| 9. | தாய்மார் சங்கம் | 13 |
| 10. | MCYM | 14 |
| 11. | MCA | 15 |
| 12. | திருமண ஆயத்தப்பயிற்சி | 15 |
| 13. | மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி | 16 |
| 14. | HOM - Special School for the Mentally Retarded | 18 |
| 15. | பெயர் விழா நல்வாழ்த்துக்கள் | 19 |
| 16. | மறைவட்ட செய்திகள் | 20 |
| 17. | ஆயரின் ஆகஸ்ட் மாத நிகழ்வுகள் | 22 |
| 18. | இம்மாதம் நினைவு கூர | 23 |
| 19. | Bishop's Diary | 24 |



*Printed by*
**Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852**




மலங்கரை சுறியானி கத்தோலிலிக்கத் திருச்சபை
2024-ஆம் ஆண்டு அன்னையர் தினத்தை முன்னிட்டு
குடும்பநல ஆயர் மாமன்ற பணிக்குழு தலைவர்
வழங்கு சுற்றறிக்கை

## அன்னையர் தினக் கொண்டாட்டம் (ஆகஸ்ட் 25, 2024)

*மதிப்பிற்குரிய ஆயர்களே, கோர் எப்பிஸ்கோப்பாமார்களே, ரம்பான்மார்களே, குருக்களே, துறவிகளே, இறையேசுவில் அன்புமிக்க சகோதர சகோதிரிகளே,*

‘தாய்’ என்ற புனித பெயர் அருளுனுடையவும் தூய்மையினுடையவும் ஆற்றலை தன்னகத்துள்ளே கொண்டுள்ளது என்பதை தனது சொந்த வாழ்வினால் உலகிற்கு உரைத்த புனித மோனிக்காவின் பெயர் கொண்ட விழாவை ஆகஸ்ட் மாதம் 28-ம் நாள் திருச்சபை கொண்டாடுகின்றது. இப்புனிதையை விண்ணகப்பாதுகாவலியாக கொண்டிருக்கின்ற மலங்கரை கத்தோலிக்க தாய்மார் சங்கம் இந்நாளை MCMF தினமாக கொண்டாடுகிறது. திருச்சபை, மறைமாவட்டம், மறைவட்டம் என அனைத்து தளங்களில் இவ்வியக்கத்தின் உறுப்பினர்களாய் இருக்கின்ற தாய்மார்கள் அனைவரையும், அவர்களை வழிநடத்துகின்ற அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அனைவருக்கும் இந்நாளின் ஜெபங்களையும், வாழ்த்துக்களையும் இதய பூர்வம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலங்கரை திருச்சபையின் அனைத்து பங்கு தளங்களிலும் மறைமாவட்டங்களிலும், மறைவட்டங்களிலும் ஆகஸ்ட் மாதம் 25-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை தாய்மார் சங்க தினமாக அனுசரிக்க வேண்டுமென்று நினைவூட்டுகிறேன். நமது பாசமிகு தாய்மார்களை நினைவு கூர்வதற்கும் அவர்களுக்காக ஜெபிப்பதற்கும், சிறப்பாக பாராட்டுவதற்கும் தாய்மார் சங்க தினத்தில் பொருள் செறிந்த நிகழ்வுகளை ஒழுங்குபடுத்த வேண்டும்.

இந்நேரத்தில், வயநாடு முண்டக்கையில் ஏற்பட்ட வேதனைமிகு இயற்கை பேரிடர்க்கு உட்பட்ட அனைத்து மக்களையும் நமது ஜெபங்களில் தனிப்பட்ட முறையில் நினைவுகூர்வோம். இறந்து

போனவர்களையும் அனைத்தையும் இழந்தவர்களையும் இறை சன்னிதியில் சமர்பிப்போம். "கொடிய துன்பங்களிலிருந்தும் தீமையிலிருந்தும் எங்களை மீட்டருளும்" என்ற மாலை மன்றாட்டிலுள்ள ஜெபத்தை இறைசன்னிதியில் அதிக ஆற்றலுடன் நாம் எறெடுப்போம்.

2024 புதுவருடப்பிறப்பன்று திருத்தந்தை பிரான்சிஸ் உலக மக்களை நோக்கி இவ்வாறு கூறினார் : "சமாதானமின்மையின் எதிரொலி ஒலிக்கின்ற இக்காலகட்டத்தில் மானிட குடும்பத்தை ஒற்றுமையில் கட்டியெழுப்ப ஆற்றல் மிகுந்த ஒரு தாய் நமக்கு தேவை. தூய கன்னி மரியாவைப் பாருங்கள்; மானிட குலத்தை ஒன்றிணைக்கிறவளும், ஆறுதல்படுத்துகிறவளும் அவளே. மனித மக்களின் வாழ்க்கை பிரச்சனைகளுக்கு செவிமடுக்கிறவளும் கண்ணீர் துடைக்கிறவளும் அவளே." ஒவ்வொரு தாயும் எப்படி இருக்க வேண்டும் என்பதன் வெளிப்பாட்டையே திருத்தந்தை பிரான்சிஸ் வழியாக உலகம் புரிந்துக்கொண்டது. உலகின் முன்னிலையில் தூய கன்னிமரியாள் முன்உதரணமாக விழங்குவதை போல ஒவ்வொரு தாயும் குடும்பங்களில் வாழ்க்கை பாடமாக மாற வேண்டும் என்ற நினைவூட்டல் திருதந்தையின் உரையில் அடங்கியுள்ளது. இரண்டாம் கிறிஸ்து என்று அறியப்படுகின்ற புனித பிரான்சிஸ் அசிசி தன்னுடைய அமைதியின் ஜெபத்தில் 'என்னை அமைதியின் கருவியாக மாற்ற வேண்டுமே' என்று ஜெபித்ததைப் போன்று, அமைதி மற்றும் ஒற்றுமையின் இறைகருவிகளாக எங்களையும் மாற்றும் என்று தாய்மார்கள் கரம் உயர்த்தி ஜெபிக்க வேண்டும். ஒன்றிணைக்கவும், ஆறுதல்படுத்தவும், செவிமடுக்கவும், கண்ணீர் துடைக்கவும் தாய்மார்களுக்கு அருளப்பட்டிருக்கின்ற வரங்களை குடும்பத்திற்கு உள்ளேயும் வெளியேயும் செயல் வடிவமாக்க வேண்டும். குடும்பத்தில் மட்டுமல்ல பங்குதளத்தையும், சமூகத்தையும் ஒற்றுமையிலும் சமாதானத்திலும் நிலைநிறுத்த தாய்மார்களுக்கு இயல வேண்டும். அங்கனம் தாய்மார் சங்கம் திருச்சபையின் ஒரு 'தாய் முகமாக' ஒளிரட்டும்! ஒற்றுமையின் இறைவாக்கினராகிய மார் இவானியோஸ் ஆண்டகை நமக்கு அருளிய ஒற்றுமையினுடையவும் சமாதானத்தினுடையவும் பாதையில் வாழ்க்கை பயணத்தை தொடர்வோம்.



மறுவொன்றிப்பு நூற்றாண்டுவிழா கொண்டாட்டங்களை முன்கண்டுகொண்டு திருச்சபை ஒன்றிணைந்து மேற்கொள்ளும் ஆன்மீக ஆயத்தத்தின் ஒரு பகுதியாக 2024 செப்டம்பர் 20 முதல் ஒருவருடம் இறைவார்த்தை ஆண்டாக அனுசரிக்கப்படுகிறது. இந்நாட்களில் மனிதனாக மண்ணில் நம்மிடையே குடிகொண்ட (யோவா 1:14) இறைவார்த்தையை இறுகப்பற்றி ஆன்மீக உத்வேகம் பெற திருச்சபை மக்கள் குறிப்பாக தாய்மார்கள் முயற்சிக்க வேண்டும். வார்த்தையாகிய இயேசுவோடுள்ள ஆன்மீக உறவிலும் இறைவார்த்தையாகிய திருவிவிலியத்திலும் ஆழப்பட திருச்சபை தயாராகின்ற இக்காலகட்டத்தில் நாம் விழிப்புடன் பயன்படுத்த வேண்டும். திருச்சபை மற்றும் மறைமாவட்ட தளங்களில் கொடுக்கப்படுகின்ற இறைவார்த்தை ஆண்டிற்கான அனைத்து செயல்பாடுகளிலும் உணர்வுடன் செயல்பட தாய்மார் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் ஒருமித்த மனதுடன் தயாராக வேண்டும். இறைவார்த்தை மீட்பிற்கான வாசல். வாழ்வினுடையவும் செழுமையினுடையவும் நீரோடை. இறைவார்த்தை வாசிப்பு, இறைவார்த்தை தியானம், இறைவார்த்தை கல்வி போன்றவற்றை தனிநபர் வாழ்விலும் குடும்பங்களிலும் தாய்மார்கள் உறுதிபடுத்த வேண்டும். அங்ஙனம் இறைவார்த்தையில் வேரூன்றிய குடும்பங்களும் சமூகங்களும் மலரட்டும். திருப்பாடல் ஆசிரியருடன் இணைந்து நாமும் பாடி ஜெபிப்போம்: "உம் சொற்கள் என் நாவுக்கு எத்துணை இனிமையானவை! என் வாய்க்குத் தேனினும் இனிமையானவை" (திபா 119:103).

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபை மறுவொன்றிப்பின் நூற்றாண்டிற்காக தனிப்பட்ட முறையில் ஆயத்தமாகின்ற இத்தருணத்தில் திருச்சபை அளவிலான தாய்மார் சங்க பொறுப்பாளர்கள் அனைத்து மறைமாவட்ட MCMF அமைப்புகளை சந்தித்து செயல்பாடுகளை மதிப்பீடு செய்வார்கள். தற்போது பாறசாலை மறைமாவட்டத்தை சந்தித்து செயல்பாடுகளை மதிப்பீடு செய்தல் நிறைவடைந்துள்ளது. திருவல்லா மற்றும் பெத்தேரி மறைமாவட்டங்களை இவ்வாண்டு இறுதிக்குள் பொறுப்பாளர்கள்

சந்திப்பார்கள். மறைமாவட்ட தளங்களை ஆற்றல் படுத்துவதே இச்சந்திப்பின் முக்கிய இலட்சியமாக உள்ளது.

இவ்வாண்டு மறுவொன்றிப்பு சங்கமத்திற்கு தயாராகின்ற பாறசாலை மறைமாவட்டத்தின் பிறரன்பு செயல்களுக்கு தாய்மார் சங்கத்தின் தாராளமான பங்களிப்பை உறுதிப்படுத்த வேண்டும். அனைத்து மறைமாவட்ட தாய்மார்களும் இம்முயற்சிக்கு இதயபூர்வம் ஒத்துழைக்க வேண்டும். ஜெபம், உடனிருப்பு, தாராளமன நன்கொடை இவற்றின் மூலம் நாம் ஒவ்வொருவரும் திருச்சபை சங்கமத்தில் பங்கேற்போம்.

திருச்சபை அளவிலான தாய்மார் சங்க MCMF கொண்டாட்டம் மற்றும் சங்கமம் ஆகஸ்ட் 28-ம் நாள் 'ஜனனி - 2024' என்ற பெயரில் திருவல்லா மறைமாவட்டத்தின் தலைமையில் சாந்தி நிலையத்தில் வைத்து நடைபெறும். மறைமாவட்ட தாய்மார் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களையும், இயக்குநர் அருட்தந்தையர்களையும், வழிகாட்டிகளையும் இந்நிகழ்விற்கு இதயபூர்வம் வரவேற்றுக் கொள்கிறேன். அனைவருக்கும் தாய்மார் தினத்தின் எல்லாவிதமான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

*என்றும் அன்புடன்,*

† **மேதகு ஆயர் யூஹானோன் மார் தியோடோஷியஸ்**
குடும்பநல ஆயர் மாமன்றத்திற்கான பணிக்குழு தலைவர்
மூவாற்றுபுழை மறைமாவட்ட ஆயர்

06-08-2024
காதோலிலிகேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்.



# குருமடச் செய்திகள்

❖ ஆகஸ்ட் மாதம் மூன்றாம் தேதி இளம் குருமடத்தில் புது குருக்கள் தினம் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதில் இந்த வருடத்தினுடைய புது குருக்களாக அருட்பொழிவு செய்யப்பட்ட அருட்தந்தை அபிஷேக் மற்றும் அருட்தந்தை சச்சிதானந்தா ஆகியோர் குரு மாணவர்களுக்கு திருப்பலி அர்ப்பணித்தார்கள். இதனைத் தொடர்ந்து இவர்களுக்கான வாழ்த்து கூட்டம் நடைபெற்றது. இதில் அதிபர் தந்தை மற்றும் துணை அதிபர் தந்தை அவர்கள் புது குருக்களை வாழ்த்தி பேசினார்கள், அருட்சகோதரர்கள் சார்பாக வாழ்த்து பாடல்கள் பாடப்பட்டன. பிறகு அருட்தந்தை நினைவு பரிசினை புது குருக்களுக்கு வழங்கினார்.

❖ இந்த மாதத்தினுடைய Mission Visit ஆனது முக்கடல் ஆசரமத்தில் வைத்து நடைபெற்றது. இதில் அருட்தந்தை சச்சிதானந்தா மற்றும் அருட்சகோதரர்கள் சேர்ந்து நண்பகல் மட்டும் முற்பகல் ஜெபங்களில் பங்கேற்றனர். இதனைத் தொடர்ந்து முதியோர்களுடன் சேர்ந்து மத்தியான உணவை உண்டனர். பின்னர் அருட்தந்தை சச்சிதானந்த அவர்களின் வாழ்க்கை அனுபவத்தை மிக ஆர்வமுடன் கேட்டுக்கொண்டனர். பின்னர் அதன் அருகிலுள்ள முக்கடல் அணையை பார்ப்பதற்காக அருட்சகோதர்கள் மிக ஆர்வமுடன் சென்றனர்.

❖ நான்காம் தேதி அன்று புனித ஜாண் மரிய வியானியின் நாம விழாவானது குருக்கள் தினமாக குரு மடத்தில் கொண்டாடப்பட்டது. அன்று புனித ஜான் மரியா வியானியின் வாழ்க்கையை பற்றி அருட்சகோதரர்கள் பகிர்ந்து கொண்டனர்.

❖ இந்த வருடம் புனே மறைமாவட்டத்திற்காக குருத்துவ அருட்பொழிவு பெற்ற அருட்தந்தை கிறிஸ்து தாஸ் அடிகளார் அவர்கள் ஐந்தாம் தேதி அன்று குருமடத்தில் குரு

மாணவர்களுக்கு mission அனுபவம் மற்றும் குருத்துவ வாழ்க்கையில் வருகின்ற சவால்களை குறித்தும் பகிர்ந்து கொண்டார். ஆறாம் தேதி அன்று அவர் அருட்சகோதரர்களுக்கு திருப்பலியும் அர்ப்பித்தார்.

❖ சுதந்திர தினம் மற்றும் இறை அன்னையின் விண்ணேற்பு தினம் வெகு சிறப்பாக குருமடத்தில் கொண்டாடப்பட்டது. இதில் அருட்தந்தை சுரேஷ் ஆன்டனி அவர்கள் தலைமையேற்று திருப்பலி நடத்தினார். ஒரு செயலில் நன்மை தீமை பகுத்தறிந்து செய்ய வேண்டும் என்ற மைய சிந்தனையை, அருட்தந்தை மறைவுரையில் வழங்கினார். பின்னர் கொடியேற்றம் நடைபெற்றது. இவை யாவற்றிலும் புனித அல்போன்சா மறைபரப்பு தள மக்கள் கலந்து கொண்டார்கள்.

❖ அருட்சகோதரர்களுக்கான மாதாந்திர தியானம் ஆனது 23 மற்றும் 24 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இதில் அனைத்து களப்பணியாளர்கள் மற்றும் அருட் சகோதரர்கள் பக்தியோடு மாதாந்திர தியானத்தில் பங்கேற்றினார்.

## குருக்கள் கூடுகை

குருக்களின் பாதுகாவலரான புனித ஜாண் மரிய வியானியின் திருநாளை முன்னிட்டு குருக்களுக்கான கூடுகை ஆகஸ்ட் மாதம் 6-ம் தியதி செவ்வாய்க்கிழமை கன்னியாகுமரி மார் இவானியோன் அனிமேஷன் செண்டரில் வைத்து நடைப்பெற்றது. மறைமாவட்ட குருக்கள் அனைவரும் இக்கூடுகையில் கலந்துகொண்டு குருத்துவ உறவையும். பகிர்வையும் வலுபடுத்தினர்.

### மாதாந்திர தியானம்

குருக்களுக்கான மாதாந்திர தியானமானது 13/08/2024 அன்று ஆயர் இல்லத்தில் வைத்து நடைப்பெற்றது.



# மேரி மக்கள் துறவற சபை

மேரி மக்கள் துறவற சபை நிறுவனர் பெருமதிப்புக்குரிய மோண் ஜோசப் குழிஞ்ஞாலில் அவர்களின் 41 -வது நினைவு தினத்தை முன்னிட்டு 22/08/2024 அன்று மாலையில் சிறப்பு ஜெபமும் அதனைத் தொடர்ந்து நினைவு கூட்டமும் நடைபெற்றது. நினைவு தினமான 23/08/2024 அன்று காலை 6:30 மணிக்கு மேதகு ஆயர் ஜோசுவா மார் இக்னாத்தியோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் மோண் ஜோஸ் பிரைட் மற்றும் அருட்தந்தையர்கள் இணைந்து திருப்பலியை நிறைவேற்றினார். அதனைத் தொடர்ந்து நினைவுக் கூட்டமும் நடைபெற்றது. நினைவு கூட்டத்தில் 10 மற்றும் 12 வகுப்புகளில் பள்ளிகளில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கும், போட்டிகளில் பங்குகொண்டு பரிசு பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. அதனோடு இணைந்து கல்வி உதவித் தொகையும் வழங்கப்பட்டது. அதன் பிறகு கல்லறையில் தூபம் மன்றாட்டும் நடைபெற்றது. பெருமதிப்புக்குரிய மோண். ஜோசப் குழிஞ்ஞாலில் அவர்களுக்கு எம் இதய அஞ்சலிகள்.

## Bishop's Feast Day Charity Fund
### Diocese of Marthandam
### 2023 - 2024

**Convents**

| No. | Convents | Amount |
|---|---|---|
| 1 | SIC Sisters, Nalanjira Province | 25,000.00 |

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## மடிக்கணினி பழுதுபார்க்கும் பயிற்சி – நிறைவுநிகழ்வு

பத்தாம் வகுப்பு தேர்ச்சிபெற்று உயர் படிப்பு படிக்க இயலாத மாணவர்களுக்கு மடிக்கணினி பழுதுபார்க்கும் தொழில் கல்வி பயிற்சியானது மிட்ஸ் நிறுவனத்தில் வைத்து நடத்தப்பட்டு வந்தது. பயிற்சியினை திரு. இராதாகிருஷ்ணன் அவர்கள் நடத்தினார்கள். 10 நாட்கள் நடைபெற்ற இந்த பயிற்சியின் நிறைவு நிகழ்வானது 30.07.2024 அன்று அருட்தந்தை சுனீஷ் குமார் தலைமையில் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. அருட்தந்தை அவர்கள் தமது உரையில், மாணவர்களுக்கு கிடைத்த இந்த அரிய வாய்ப்பை இத்துடன் விட்டு விடாமல் இந்த அறிவை பயன்படுத்தி தொழில் செய்து முன்னேற வேண்டும் என்று மாணவர்களை அறிவுறுத்தினார்கள். அதனை தொடர்ந்து மாணவர்களுக்கு ரூபாய் 1,500/- மதிப்பிலான பயிற்சி உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட்டு நிகழ்வானது நிறைவுபெற்றது. இந்த நிகழ்வில் மிட்ஸ் திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப், திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.பேட்ரிக் ஆன்றனி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## உதவித்திட்டங்கள்

1. 02.07.2024 அன்று மிட்ஸ் உறுப்பினர் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினராக இருந்து இறந்துபோன 4 உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கு இறப்பு நிதியாக நபருக்கு ரூபாய் 10,000/- வீதம் மொத்தம் ரூபாய் 40,000/- வழங்கப்பட்டது.

2. 17.07.2024 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக நாகர்கோவில் பணிமண்டலத்தில் உள்ள 10 சுய உதவி குழுக்களில் உள்ள 41 பயனாளிகளுக்கு ரூபாய் 20 இலட்சம் கடனாக வழங்கப்பட்டது.

3. 21.08.2024 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக மார்த்தாண்டம் பணிமண்டலத்தில் உள்ள 10 சுய உதவிகுழுக்களில் உள்ள 40 பயனாளிகளுக்குரூபாய் 20 இலட்சம் கடனாகவழங்கப்பட்டது.

## பிறநிகழ்வுகள்

1. 18.07.2024 அன்று விண்ணைத்தொடு திட்டத்தின் வருடாந்திர ஆய்வு கூட்டம் அழகியமண்டபம் அன்னை ஆதா பயிற்சி மையத்தில் வைத்து நடைபெற்றது. இந்த கூட்டத்தில் விண்ணைத் தொடு திட்டத்தின் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

2. 28.07.2024 அன்று மிட்ஸ் அலுவலகம், ஆற்றூர் மற்றும் மரியகிரி ஆகிய பகுதிகளில் வைத்து மிட்ஸ் அறிவு திறன் தேர்வு நடத்தப்பட்டது. இந்த தேர்வினை தளிர்கள் உலகம் திட்ட பயனாளிகள் 128 பேர் எழுதினர்.

# DIOCESE OF MARTHANDAM
## Districts and Churches 2023-24
## பங்குப்பேரவை ஒப்புதல் பெற்ற பங்குகள்

| | |
|---|---|
| **1. Kollenkode District**<br>1. Kirathoor<br><br>**2. Azhakiyamandapam District**<br>1. Poonthoppu<br>2. Alwarcoil<br>3. Kattuvilai | **3. Nagercoil District**<br>1. Bhoothapandy<br>2. Mukkadal<br>3. James Town |

## மலங்கரை கத்தோலிக்க சிறார் இயக்கம் (MCCL)

மலங்கரை கத்தோலிக்க சிறார் இயக்க கூடுகையானது 25.08.2024 அன்று குழித்துறை மார் எஃப்ரேம் வளாகத்தில் வைத்து நடைபெற்றது. இந்த கூடுகையில் கடந்த ஆண்டுகளில் மறைவட்ட இயக்குனர்களாக, அருட்சகோதரி ஊக்குனர்களாக இருந்து சிறப்பாக செயல்பட்டு தற்போது இந்த பொறுப்பிலிருந்து விடுபட்டு மற்ற பணிபொறுப்புகள் பெற்று சென்றவர்களுக்கு நன்றி கூறப்பட்டது. புதிய பொறுப்பாளர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த ஆண்டு MCCL போட்டியாக ஒயிலாட்டம் நடத்தலாம் என்று தீர்மானிக்கபட்டது. அதன்படி ஒவ்வொரு மறைவட்டங்களிலும் அத்தந்த மறைவட்ட இயக்குனர் தந்தையர்களின் வழிகாட்டுதலின்படி 05.01.2025 -க்கு முன்னதாக மறைவட்டங்களில் போட்டிகள் நடத்தி முதல் மற்றும் இரண்டாம் பரிசு பெறும் பங்குகளின் பெயர்களை மறைமாவட்ட MCCL அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என கூறப்பட்டது.

### MCCL மறைமாவட்ட மறைவட்ட புதிய பொறுப்பாளர்கள்

Fr. அனீஷ் - மறைமாவட்ட இயக்குநர்

Sr. கிறிஸ்டி மரியா - மறைமாவட்ட அருட்சகோதரி ஊக்குனர்

Mrs. ராணி பாலவிளை - மறைமாவட்ட MCCL செயலர்

| | | |
|---|---|---|
| மார்த்தாண்டம் மறைவட்டம் | : | Rev. Fr. தேவதாஸ் |
| | | Rev. Sr. ஷீபா ஜாண் DM |
| குலசேகரம் மறைவட்டம் | : | Rev. Fr. ஜோஸ் கிராத்தூர் |
| | | Rev. Sr. யோவன்னா DM |
| அழகியமண்டபம் மறைவட்டம் | : | Rev. Fr. சிபி |
| | | Rev. Sr. ஏஞ்சல் ஜோஸ் DM |
| நாகர்கோவில் மறைவட்டம் | : | Rev. Fr. ரெதீஷ் ரிச்சார்டு |
| | | Rev. Sr. பிரான்சி DM |
| கொல்லங்கோடு மறைவட்டம் | : | Rev. Fr. சஜீவ் பிலாங்காலை |
| | | Rev. Sr. மினி SOC |
| களியக்காவிளை மறைவட்டம் | : | Rev. Fr. சில்ஜின் |
| | | Rev. Sr. ஜோசிதா SOC |
| பனச்சமூடு மறைவட்டம் | : | Rev. Fr. ஜெனிற்றோ |
| | | Rev. Sr. மேபல் ஜோஸ் DM |



## தாய்மார் சங்கம்

மார்த்தாண்டம் மறைமாவட்ட தாய்மார் சங்க தினமானது 26.08.2024 அன்று மார் எப்ரேம் வளாகத்தில் வைத்து கொண்டாடப்பட்டது. அன்று காலை மறைவட்ட அளவில் நடைபெற்ற வில்லிசை போட்டிகளில் முதல் இரண்டு இடங்களை பெற்று கொண்டவர்களுக்கு மறைமாவட்ட அளவில் போட்டிகள் நடைபெற்றது. மதியம் சரியாக 2:30 மணிக்கு மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை. ஜோஸ்பிறைட் அடிகளார் அவர்களும் மேரிமக்கள் துறவற சபை புனித சூசையப்பர் மாகாணத்தலைவி மதர் றோஸ் பிரான்சிஸ் அவர்களும் டாக்டர் அனி ராஜா அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள். சிறப்பு விருந்தினர்கள் அனைவர்க்கும் சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது. பொது கூட்டத்துடன் தாய்மார்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. இதில் சுமார் 300க்கு மேற்பட்ட தாய்மார்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# MCYM
## Youth Apostolate

‘நற்கருணை நம் வாழ்வில் ஊற்றும் சிகரமும்’ என்னும் மையசிந்தனையோடு பயணிக்கும் இவ்வருடத்தில், நற்கருணை ஆன்மீகத்தை உற்சாகமூட்டும் விதமாக நமது மறைமாவட்டத்திலுள்ள அனைத்து மறைவட்டங்களிலும் நற்கருணை ஆராதனை ஒவ்வொரு பங்குதளங்களில் வைத்து நடத்தப்பட்டது. அந்த வகையில் 18-ம் தேதி பனச்சமூடு ஆலயத்தில்வைத்து பனச்சமூடு மறைவட்டத்திற்கான நற்கருணை ஆராதனையும், 25-ம் தேதி அம்பிலியில் பின்குளம் தேவாலயத்தில் வைத்து கொல்லங்கோடு மறைவட்டத்திற்கான நற்கருணை ஆராதனையும், 25-ம் தேதி மீனச்சல் பங்கில் வைத்து களியக்காவிளை மறைவட்டத்திற்கான நற்கருணை ஆராதனையும், பிலாங்காலை பங்கில் வைத்து அழகியமண்டபத்திற்கான நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. செருப்பாலூர் பங்கில் வைத்து குலசேகரம் மறைவட்டத்திற்கான நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது.



# MCA
## Diocese of Marthandam

**நாகர்கோவில் மறைவட்ட MCA அலகு சந்திப்பு மற்றும் நிர்வாகக் குழு கூட்டம்**

- 04.08.2024 அன்று புனித தேவசகாயம் பிள்ளை திருத்தலம் பெருவிளையில் வைத்து மதியம் சுமார் 3 மணியளவில் நாகர்கோவில் மறைவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் மார்த்தாண்டம் மறைமாவட்ட நிர்வாகக் குழு பொறுப்பாளர்கள் இணைந்து நாகர்கோவில் மறைவட்டத்தில் MCA செயல்பாடுகளை உற்சாகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் நாகர்கோவில் மறைவட்டத்தில் சந்திக்காத பங்குகளை சந்திக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.
- 04.08.2024 அன்று குருக்களின் பாதுகாவலராகிய புனித ஜாண் மரிய வியானியின் நினைவாக பெரும்பான்மையான பங்குகளில் MCA சார்பில் பங்குத்தந்தையர்களை சிறப்பித்து அவர்களுக்காக சிறப்பாக ஜெபித்தார்கள்.

### திருமண ஆயத்தப்பயிற்சி

**செப்டம்பர்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **13, 14** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

# மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி இலவுவிளை

### 11-வது பட்டமளிப்பு விழா

மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் 11வது பட்டமளிப்பு விழா 02.08.2024 அன்று நடைபெற்றது. கல்லூரியின் தலைவர் ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் தலைமை தாங்கினார். கல்லூரி தாளாளர் பேரருட்தந்தை சதீஷ் குமார் நிகழ்வை துவங்கி வைத்தார். கல்லூரி முதல்வர் பேரா முனைவர் லெனின் பிரட் ஆண்டு அறிக்கை வாசித்தார். சிறப்பு விருந்தினராக முனைவர் அஜீஷ் அவர்கள் கலந்து கொண்டு மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி பட்டமளிப்பு விழா உரையாற்றினார். கடந்த காலத்தை நினைவில் வைத்து, ஆசிரியர்களையும் பெற்றோரையும் மதித்து, தொழில் நுட்பத்தின் புதுப்பிப்புகளை ஏற்று கொண்டு வாழ வேண்டும் என்று அவர் மாணவர்களுக்கு நல்ல ஆலோசனை வழங்கினார். இவ்விழாவில் கல்லூரியின் நிதி காப்பாளர் அருட்தந்தை ஹெபின், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் பேரா. ஆஸ்டி பி. இவாஞ்சலின் வழிகாட்டுதலின் கீழ் பல்வேறு குழ உறுப்பினர்கள் சிறப்பாக செயல்பட்டனர்.

### Mar Fresa - 2024

மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியின் 2024-2025 கல்வியாண்டின் Mar Fresa-24 நிகழ்வு 31.07.2024, புதன்கிழமை காலை 10 மணி அன்று நடைபெற்றது. கல்லூரியின் தலைவர் Most Rev. Dr. Vincent Mar Paulos அவர்கள் தலைமை வகித்தார். மேதகு ஆயர் அவர்கள் தமது தலைமை உரையில் மாணவர்களிடம் மனிதநேயம் மிக்க பொறியாளர்கள் நம் நாட்டிற்கு தேவை என்பதனை முன்னாள் குடியரசு தலைவர் Dr. A.P.J. Abdulkalam அவர்களின் வாழ்க்கை முறை மூலம் அறிவுறுத்தி கல்வியியலின் நான்கு படிநிலைதன் தூண்களை விளக்கினார். கல்லூரி முதல்வர், பேராசிரியர் முனைவர் A. லெனின் பிரெட் அவர்கள் முதல்வர் உரையாற்றி தற்கால சூழலில் பொறியியல் கல்வியின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

Mar Fresa '24, சிறப்பு விருந்தினரான திரு. S. சண்முகம் General Manager of Tilliconveli, Techpark, Tirunelveli முயன்று கற்றால், வாழ்வில் சாதிக்க முடியாதது என ஒன்றுமில்லை என திருக்குறள் வழிநின்று விளக்கினார். மேலும் தானும் இன்று முதல் மார் எப்ரேம் குடும்பத்தின் ஒரு அங்கத்தினர் எனக்கூறி பெருமிதம் கொண்டார். கல்லூரியின் தாளாளர் பேரருட்தந்தை சதீஷ்குமார், அவர்கள் கல்லூரியின் சிறப்பு இயல்புகளை விவரித்து, அனைவரையும் பாராட்டி ஊக்குவித்தார். கல்வியியல் இயக்குநர் பேராசிரியர் முனைவர் N. ஆஸ்டின் அவர்கள் நம் கல்லூரி மாணவர்களின் ஒழுங்குமுறைகள், அகமதிப்பீடுகள் தேர்வுகள் குறித்த விவரங்களை எடுத்துரைத்தார். கல்லூரியின் நிதிக்காப்பாளர் அருட்தந்தை ஹெபின் அவர்கள் சிறப்பு விருந்தினர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார். கல்லூரியின் அனைத்து துறைத்தலைவர்களும் முதலாம் ஆண்டு மாணவ மாணவியரை இனிதே வரவேற்றனர். இறுதியில் நிகழ்வானது மதியம் 1.15 மணிக்கு தேசிய கீதத்துடன் இனிதே நிறைவுற்றது.

## HOM - SPECIAL SCHOOL FOR THE MENTALLY RETARDED


### மார் இவானியோஸ் பள்ளி மற்றும் ஹோம் சிறப்புப்பள்ளி இணைந்து சிறப்பித்த 78-வது சுதந்திர தின விழா

78-வது சுதந்திர தின விழா குழித்துறை ஹோம் சிறப்புப்பள்ளியும் மார் இவானியோஸ் சி.பி.எஸ்.இ பள்ளியும் இணைந்து பல்வேறு கலை நிகழ்வுகளுடன் சிறப்பிக்கப்பட்டது. துவக்கமாக சுதந்திர தின விழா அணிவகுப்பு நடைபெற்றது. மார் இவானியோஸ் பள்ளி வளாகத்திலிருந்து மாணவர்கள் காந்தியடிகள், பாரத மாதா, நேரு, சுபாஷ் சந்திரபோஷ், அன்னை தெரசா உள்ளிட்ட பல்வேறு வேடங்களில் அணிவகுத்து வருகை தந்தார்கள். ஹோம் சிறப்புப்பள்ளி மாணவர்கள் பேண்ட் வாத்தியம் முழங்க அவர்களை வரவேற்றார்கள். தொடர்ந்து தேசிய கொடியேற்று நிகழ்வு நடைபெற்றது. அருட்தந்தை அர்னால்டு டயஸ் அவர்கள் விழா அறிமுக உரையோடு அனைவரையும் வரவேற்றார்கள். ஹோம் சிறப்புப்பள்ளியின் தாளாளர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் தலைமை தாங்கி தேசிய கொடியேற்றினார்கள். கொடியேற்று நிகழ்வின் போது மார் இவானியோஸ் பள்ளி மாணவர்கள் பேண்ட் வாத்தியம் வாசித்து மகிழ்ந்தனர். தொடர்ந்து அரங்கத்தில் வைத்து நடைபெற்ற சுதந்திர தின விழா பொதுக்கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக குழித்துறை நீதிமன்ற Additional Public Prosecutor Adv. றாபி அவர்கள் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினார்கள். அவர் தம் உரையில் சுதந்திர இந்தியாவின் அன்றைய மற்றும் தற்போதைய நிலையையும் சுதந்திர போராட்ட தியாகிகளின் தன்னலமற்ற சேவைகளையும் நினைவு கூர்ந்து உரையாற்றினார்கள். அருட்தந்தை. அஜீஷ் குமார் அவர்கள் ஹோம் சிறப்புப்பள்ளியின் செயல்பாடுகள் குறித்து உரையாற்றினார்கள். நிகழ்வின் இடையிடையே பள்ளி மாணவர்களின் கண்கவர் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்தியா திருநாட்டின் அனைத்து மாநில கலாசார உடையணிந்து மாணவர்கள் மாறுவேட அணிவகுப்பு நடத்தியது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. சுதந்திர தினவிழா போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சிறப்பு விருந்தினர் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்கள். இறுதியாக நாட்டுப்பண் பாடலுடன் சுதந்திர தினக் கொண்டாட்ட நிகழ்வுகள் நிறைவு பெற்றது. இந்நிகழ்வில் மார் இவானியோஸ் பள்ளி துணை முதல்வர் திரு. தேவராஜ், அவர்களும் ஹோம் சிறப்புப்பள்ளி தலைமையாசிரியர் திரு. டென்னிஸ் அவர்களும் உடனிருந்தார்கள். இரு பள்ளிகளின் ஆசிரிய, ஆசிரியைகள் மாணவ, மாணவிகள் என சுமார் 500 பேர் பங்கேற்று சிறப்பித்தார்கள்.


## பெயர்விழா நல்வாழ்த்துக்கள்




அருட்தந்தை சஜீவ்
செப்டம்பர் 04



அருட்தந்தை ராபர்ட்
செப்டம்பர் 17



அருட்தந்தை மைக்கிள் முக்கம்பாலத்
செப்டம்பர் 29



அருட்தந்தை ஜெறோம்
செப்டம்பர் 30

# மறைவட்ட செய்திகள்

## களியக்காவிளை மறைவட்டம்

புனித மோனிக்காவின் திருநாளை முன்னிட்டு களியக்காவிளை மறைவட்ட அளவில் நடைபெற்ற தாய்மார்களுக்கான வில்லிசை போட்டி 04.08.2024 அன்று மரியகிரி தேவாலயத்தில் வைத்து நடைபெற்றது. எல்லா பங்குகளிலிருந்தும் பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டனர். அதிலும் குறிப்பாக தாய்மார்களுடைய அபரிவிதமான பங்களிப்பு இந்நிகழ்வுகளில் இருந்தது. இந்த போட்டியில் மீனச்சல் பங்கு முதலிடத்தையும், மரியகிரி பங்கு இரண்டாமிடத்தையும், மேக்கோடு பங்கு மூன்றாமிடத்தையும் வென்று நிகழ்ச்சிக்கு பெருமை சேர்த்தார்கள்.

## மார்த்தாண்டம் மறைவட்டம்

**மார்த்தாண்டம் மறைவட்ட தினவிழா பேரணி**

மார்த்தாண்டம் மறை வட்டம் சார்பில், நற்கருணை கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் சிகரமும் என்ற மைய சிந்தனையோடு பேரணி நடந்தது. பேரணி திக்குறிச்சி கபரியேல்புரம், புனித கபரியேல் அதிதூதர் ஆலயத்திலிருந்து புறப்பட்டு சிதறால் புனித மரியன்னை ஆலயத்தில் பொதுக்கூட்டத்துடன் நிறைவடைந்தது. ஆலயத்தில் பேரணிக்கு மார்த்தாண்டம் மறைமாவட்ட முதன்மை குரு ஜோஸ் பிரைட் அடிகளார் அவர்கள் தலைமை வகித்தார்.

மறைவட்ட அருட்தந்தையர் செயலர் ஹெபின், மறைவட்ட அருட்தந்தையர்கள் சஜின் ஏசுதாஸ், தேவதாஸ், அர்னால்டு டயஸ், ஜெனன் ஜெரால்டு, மறைவட்ட கன்னியர் இல்ல பிரதிநிதிகள், மறைவட்ட பக்த இயக்க தலைவர்கள், மறைவட்ட செயலர் வக்கீல் ஷைன்ஜோஸ், பொருளாளர் ராபின்சன், எம்.சி.ஏ மறைவட்ட தலைவர் ஜாண், மறைமாவட்ட மறைக்கல்வி மன்ற தலைவர் மரிய நோபர்ட், மறைமாவட்ட செயலர் அருள்தாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



## குலசேகரம் மறைவட்டம்

குலசேகரம் மறைவட்ட MCCL கூட்டமானது 11.08.2024 ஞாயிற்றுக்கிழமை மதியம் 3.00 மணியளவில் அருட்தந்தை ஜோஸ் அவர்களின் தலைமையில் தொடக்க ஜெபத்துடன் ஆரம்பமானது. இக்கூட்டத்தில் அணக்கரை, செருப்பாலூர், பெருவழிக்கடவு ஆகிய பங்குகளிலிருந்து MCCL பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். கடந்த ஆண்டு MCCL Animater ஆக செயல்பட்டு வந்த Sr. உதயா தோமஸ் DM அவர்களுக்கு நன்றிகள் தெரிவிக்கப்பட்டது. மேலும் MCCL புதிய Animater ஆக Sr. யோவன்னா DM அவர்கள் பொறுப்பேற்று செயல்பட்டு வருகின்றார்கள்.

### ❖ மறைக்கல்வி

ஜூலை 28 மறைவட்ட மறைக்கல்வி செயற்குழு கூட்டம் செருப்பாலூர் பங்கில் வைத்து நடைபெற்றது. அனைத்து செயற்குழு உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டனர். அக்கூட்டத்தில் மறைவட்ட மறைக்கல்வி எழுத்துப் போட்டிகள் செருப்பாலூர் பங்கில் வைத்து நடத்த தீர்மானிக்கப்பட்டது. ஆகஸ்ட் 4 மறைக்கல்வி தினம் பங்கு அளவில் வெகு சிறப்பாக கொண்டாடி அதனை மறைவட்ட மறைக்கல்வி வாட்ஸாப்ப் குழுமத்தில் பதிவேற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

### ❖ தாய்மார் சங்கம்

குலசேகரம் மறைவட்ட தாய்மார் சங்கத்திற்கான வில்லிசை போட்டியானது 11.08.2024 அன்று மதியம் 2 மணிக்கு செருப்பாலூர் பங்கில் வைத்து நடைபெற்றது. அருட்தந்தை பிபின் அவர்கள் துவக்கஜெபம் நடத்தி போட்டியினை ஆரம்பித்து வைத்தார். சுமார் 6 பங்குகளிலிருந்து போட்டியாளர்கள் பங்கு பெற்றனர். வெற்றி பெற்றவர்களுக்கு இளங்குருமட அதிபர் அருட்தந்தை சஜித் பிரான்சில் மற்றும் அருட்தந்தை மரிய அற்புதம் அவர்களும் இணைந்து பரிசினை வழங்கினர். பங்கு கொண்ட அனைவருக்கும் ஊக்கப்பரிசு வழங்கப்பட்டது.

# ஆயரின் ஆகஸ்ட் மாத நிகழ்வுகள்



2 ➢ திருவனந்தபுரம், மலங்கரை கத்தோலிக்க உயர் குருமடத்தில் திருப்பலி நிறைவேற்றி ஆசீர் வழங்கினார்.

2 ➢ மார் எப்ரேம் குருத்துவ கல்லூரியில் பட்டமளிப்பு விழாவில் கலந்துக்கொண்டார்.



## இம்மாதம் நினைவு கூர

செப்டம்பர் 2024

1 – உருமாற்றத்திற்குப்பின் நான்காம் ஞாயிறு
எட்டு நோன்பு ஆரம்பம்
இறைவாக்கினர் யோசுவா

2 – புனித சீமோன் தெஸ்தூனி

5 – புனித அன்னை தெரசா

8 – உருமாற்றத்திற்குப்பின் ஐந்தாம் ஞாயிறு
தூய இறையன்னையின் பிறப்புத் திருநாள்
எட்டு நோன்பு நிறைவு

9 – புனித யோவாக்கீம், புனித அன்னம்மாள்

14 – சிலுவைத் திருநாள்

15 – சிலுவைத் திருநாளுக்குப்பின் முதல் ஞாயிறு
தூய வியாகுல அன்னை

16 – புனித சிப்ரியான்

19 – புனித ஜனுவாரியூஸ்

20 – மலங்கரை கத்தோலிக்க மறுஒன்றிப்பு தினம்

21 – தோமஸ் மார் எவுசேபியஸ், கீவற்கீஸ் மார் மக்காரியோஸ்,
யூஹானோன் மார் தெயடோஷியஸ் ஆண்டகையரின்
ஆயர் திருநிலைப்பாடு

22 – சிலுவைத் திருநாளுக்குப்பின் இரண்டாம் ஞாயிறு

23 – புனித பாத்ரெ பியோ


27 – புனித வின்செண்ட் தே பவுல்

28 – சக்கரியாஸ் மார் அத்தனாசியோஸ் ஆண்டகையின் நினைவு


29 – சிலுவைத் திருநாளுக்குப்பின் மூன்றாம் ஞாயிறு
தலைமை வானதூதர்களான புனித மிக்கேல்,
புனித கபரியேல், புனித இரபேல்


30 – புனித ஜெறோம்



5


8


15


23


27


30

## Mar Ephraem College




## DM Convent



## மார்த்தாண்டம் மறைவட்ட தினவிழா



## Malankara Catholic Mother's forum Celebration - 2024



## இளங்குருமடம்



## MIDS



## HOM Special School



## MCYM



## MCA

